05.05.2015

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை ஆட்சிக்குழுக் கூட்டம்**

வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் சார்பில் நிகழாண்டில் ரூ.45.65 லட்சத்தில் பணிகள் மேற்கொள்வதற்காக ஆட்சிக்குழு கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்ட ஆட்சியர் வளர்ச்சி மன்ற கூட்டரங்கத்தில் திங்கள்கிழமை மாலையில் நடந்த கூட்டத்திற்கு ஆட்சியர் வே.ராஜாராமன் தலைமை வகித்தார். வேளாண்மைத்துறை இணை இயக்குநரும் திட்ட இயக்குநருமான க.சுப்பையா முன்னிலை வகித்தார். இதில், விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் சார்பில் வட்டார தொழில் நுட்பக்குழு மூலம் விவசாயிகளுக்கு நவீன தொழிற்பயிற்சி, செயல்விளக்கம், வெளிமாவட்டம் மற்றும் வெளிமாநில பட்டறிவு பயணம் மேற்கொள்ளல், விவசாய விளைபொருள் ஆர்வலர் குழுக்கள் அமைத்தல், பண்ணைப்பள்ளிகள் மூலம் விவசாயிகளுக்கு நவீன தொழில் நுட்பங்களை எடுத்துரைத்தல் போன்ற விரிவாக்கப்பணிகள் நடைபெற்று வருகின்றன. அதன் அடிப்படையில் நிகழாண்டில் திட்டத்தை செயல்படுத்த ரூ.45.65 லட்சத்தை பணிகள் மேற்கொள்வதற்காக வட்டாரம் வாரியாக பிரித்து வழங்குவதற்கு ஆட்சிக்குழு ஒப்புதல் வழங்கியது. மேலும், இதுவரையில் இத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் வேளாண்மைத்துறை அதிகாரிகள், இத்திட்ட ஆட்சிக்குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கோடை மழையால் பண்ணைக் குட்டைகளில் பெருகிய தண்ணீர்**

ராமநாதபுரம் மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வடிப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள பண்ணைக் குட்டைகளில் கோடை மழையால் நீர் நிரம்பியிருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் 118 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் நீர் வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தனியாருக்கு சொந்தமான இடங்களில் விவசாயத்துக்கு பயன்படும் வகையில் பண்ணைக் குட்டைகள் அமைத்தல், கிராம ஊருணிகள் மற்றும் குளங்களை ஆழப்படுத்துதல், கால்நடைக் குட்டைகள் அமைத்தல், வரத்துக் கால்வாய்களை சீரமைத்தல், தடுப்பணைகள் மற்றும் சம உயர வரப்புகள் அமைத்தல் போன்ற பணிகள் தீவிரமாக நடந்து வருகின்றன.

தற்போது பெய்துள்ள கோடை மழையால் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள அனைத்துப் பண்ணைக் குட்டைகளிலும் மற்றும் நீர் நிலைகளிலும் மழைநீர் சேகரிக்கப்பட்டு விவசாயிகள் பலனடைந்து வருகின்றனர். இத்தண்ணீர் மூலம் வேளாண் பண்ணை உற்பத்தி மேம்பாடு, தீவனப்பயிர் சாகுபடி, சமுதாய நாற்றங்கால் அமைத்தல், புறம்போக்கு தரிசு நிலங்களில் மரக்கன்றுகள் நடவு செய்தல் போன்ற பணிகளும் நடந்து வருகிறது.

இது குறித்து ராமநாதபுரம் மாவட்டம் முள்ளிமுனை கிராமத்தை சேர்ந்த விவசாயி கே.மல்லிகா கூறியதாவது: எங்களது தோட்டத்தில் நீர் வடிப்பகுதி திட்டத்தின் கீழ் ரூ.50 ஆயிரம் மதிப்பில் அதிகாரிகள் பண்ணைக் குட்டை அமைத்துக் கொடுத்தார்கள்.

இதில் தற்போது போதுமான மழைநீர் நிரம்பி உள்ளது. எனது வயலில் மிளகாய், பருத்தி ஆகியன பயிரிட்டுள்ளேன். வறட்சி காரணமாக தண்ணீர் இல்லாமல் மிளகாயும், பருத்தியும் வாடி விடுமோ என்று

அச்சமடைந்த நேரத்தில் கோடை மழையால் பண்ணைக் குட்டையில் தண்ணீர் தேங்கியது.

இந்த நீரைப் பயன்படுத்தி அவற்றைக் காப்பாற்றி விட முடியும் என்ற நம்பிக்கை துளிர்விட்டுள்ளது என்றார்.

ராமநாதபுரம் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் நா.வி.கிருஷ்ணமூர்த்தி கூறியதாவது: ராமநாதபுரம் மாவட்டத்தில் 6 வட்டாரங்களில் 118 கிராமங்களில் 1811 பண்ணைக் குட்டைகள் நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளன.

இப்பண்ணைக் குட்டைகளால் சுமார் 2 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெற்றுள்ளது. இந்த 118 கிராமங்களிலும் உள்ள ஊருணிகள், கண்மாய்கள் மற்றும் வரத்துக் கால்வாய்கள் ஆகியன நீர்வடிப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

நீர்வடிப்பகுதிக்கு உள்பட்ட 353 பண்ணைக் குட்டைகள், நீர்வடிப்பகுதி இல்லாத 138 பண்ணைக் குட்டைகள் உள்பட மொத்தம் 411 பண்ணைக் குட்டைகளுக்கு ரூ.3.44 லட்சம் மதிப்பில் 3,43,700 மீன் குஞ்சுகள் வேளாண்மைத் துறையின் சார்பில் வழங்கப்பட்டு விவசாயிகள் பலனடைந்து வருகின்றனர்.

கோடை மழையால் பண்ணைக் குட்டைகள் நிரம்பியிருப்பதாலும் அவற்றில் வளர்க்கப்பட்ட மீன் குஞ்சுகளை நல்ல விலைக்கு உள்ளூரிலேயே விற்று பலனடைவதாலும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர் என்றார்.

**பயிர்க்கடன் வழங்கும் நடைமுறை: மாற்றம் கொண்டுவர வலியுறுத்தல்**

பயிர்க்கடன் வழங்கும் நடைமுறையில் மத்திய அரசு மாற்றம் கொண்டு வரவேண்டும் என்று தமிழக விவசாயிகள் சங்கம் (கே.சி.ரத்தினசாமி பிரிவு) வலியுறுத்தியது.

இச்சங்கத்தின் ஆலோசனைக் கூட்டம் ஈரோடு - பெருந்துறை சாலையில் உள்ள சங்க அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்டத் தலைவர் ஈ.ஆர்.குமாரசாமி தலைமை வகித்தார். நிர்வாகிகள் வேலுசாமி, லோகுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில், தமிழக அரசு அமல்படுத்தியுள்ள ஆழ்துளைக் கிணறுகள் முறைப்படுத்தும் சட்டத்தில் ரூ. 5 ஆயிரம் கட்டணம் செலுத்தி உள்ளாட்சி அமைப்புகளில் பதிவு செய்யக் கட்டாயப்படுத்துவதால் விவசாயிகள் அலைகழிக்கப்படுவதுடன், தண்டனை வழங்கப்படும் என்பது முறைகேடுகளுக்கு வழிவகுக்கும். எனவே, இச்சட்டத்தை திரும்பப்பெற்று, இதற்கு மாற்று வழியை விவசாயிகளிடம் கலந்து ஆலோசித்து நடைமுறைப்படுத்த வேண்டும். மத்திய அரசின் நிலம் கையகப்படுத்தும் மசோதா, விவசாயிகளை கடுமையாக பாதிக்கும் என்பதால் விவசாயிகளின் சம்மதம் இன்றி நிலத்தை கையகப்படுத்தக் கூடாது. மத்திய அரசின் பயிர்க்கடன் வழங்கும் நடைமுறையில் மேற்கொள்ள வேண்டிய மாற்றத்தை தக்க வல்லுநர் குழு அமைத்து விவசாயிகளின் கருத்துகளைக் கேட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். அதுவரை தற்போதுள்ள நிலையே தொடர உரிய வட்டி மானியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து தரவும், அனைத்து விவசாயிகளுக்கும் வட்டியில்லா பயிர்க்கடன் மற்றும் பொருளீட்டுக் கடன் வழங்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**காய்கறி கண்காட்சியில் ரூ.3.5 லட்சம் வருமானம்**

கோத்தகிரியில் நடைபெற்ற 2 நாள் காய்கறி கண்காட்சியில் ரூ. 3.5 லட்சம் வருமானம் வந்துள்ளதாக தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர். இதுகுறித்து, தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் விடுத்துள்ள அறிவிப்பில் கூறி யிருப்பதாவது: கோத்தகிரி நேரு

பூங்காவில், மே 2,3-ஆம் தேதிகளில் நடைபெற்ற காய்கறி கண்காட்சியில் 20 ஆயிரம் சுற்றுலாப் பயணிகள் கலந்துகொண்டனர். இதில், நுழைவு கட்டணம் வசூலிக்கப்பட்டதில் 3 லட்சத்து 40 ஆயிரம் வருமானம் வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவில் நிவாரணம் வழங்க வேண்டும்**

"அண்மையில் பெய்த திடீர் மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணத் தொகையை தில்லி அரசு விரைவில் வழங்க வேண்டும்' என்று தில்லி மாநில பாஜக தலைவர் சதீஷ் உபாத்யாய் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாதிக்கப்பட்ட விவசாயிகளைச் சந்தித்து குறைகளைக் கேட்டறிவதற்காக தில்லி பாஜக தலைவர் சதீஷ் உபாத்யாய், வடக்கு தில்லியில் உள்ள கேதா காலன், பக்தவார்பூர் உள்ளிட்ட பல கிராமங்களுக்கு திங்கள்கிழமை யாத்திரை மேற்கொண்டார்.

இந்தச் சந்திப்புக்குப் பிறகு செய்தியாளர்களிடம் அவர் தெரிவித்தது:

பருவம் தவறிய மழையின் காரணமாக பயிர்கள் சேதமடைந்ததால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை அவர்களுக்குரிய இழப்பீட்டுத் தொகையைத் தில்லி அரசு வழங்கவில்லை.

இதை தொடர்ந்து கேரா காலன், பக்தவர்பூர், பல்லா, ஹமீத்பூர், நரேலா, பங்க்நெர், கோஹா, தரியாபூர், குதூப்கர், பஞ்சாப்கோர், கிராம் மஜ்ரா, பேகம்பூர், திக்கிபூர் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்றேன். பாதிக்கும் மேற்பட்ட விவசாயப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்ட பயிர்கள் தொடர்பாக மதிப்பீட்டுப் பணிகளையும் தில்லி அரசு தாமதமாக மேற்கொண்டது. பாதிக்கப்பட்ட பயிர்கள் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக கிராம கணக்கர்கள் (பட்வாரி) பணம் கேட்பதாக விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இது தவிர கிராமப்புறங்களில்

முன்னறிவிப்பில்லாத மின்தடை, சுகாதாரம், போக்குவரத்து வசதி குறைவு, பள்ளிகளில்
ஆசிரியர்கள் பற்றாக்குறை, கிராமப்புறங்களில் கல்லூரிகள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்தும் கிராமப்புற மக்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.
கிராமப்புறங்களில் தேவையான வசதிகளை ஏற்படுத்தக் கோரி எதிர்காலத்தில் பாஜக போராடும். மக்களவை உறுப்பினர்கள், கவுன்சிலர்கள் ஆகியோரது உதவியுடன் கிராமப் புறங்களில் வளர்ச்சிப் பணிகளை பாஜக மேற்கொள்ளும் என்றார்.
இந்தக் கிராமப்புற யாத்திரையின்போது (கிராமின் பிரவாஸ்) தெற்கு தில்லி மக்களவை உறுப்பினர் ரமேஷ் பிதூரி, பாஜக தேசிய செயலாளர் ஆர்.பி. சிங், முன்னாள் எம்எம்ஏ குல்வந்த் ராணா, வடக்கு தில்லி மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் மோகன் பரத்வாஜ், கட்சியின் முக்கியத் தலைவர்கள் ஆஷிஷ் சூது, ரேகா குப்தா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

**ராசிபுரத்தில் ரூ.16 லட்சத்துக்கு பருத்தி ஏலம்**

ராசிபுரம் வேளாண்மைக் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற பருத்தி ஏலத்தில் ரூ.16 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.
ராசிபுரம் வேளாண்மைக் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தின் சார்பில் ராசிபுரம் அருகே உள்ள கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம் நடைபெற்றது.
சீராப்பள்ளி, சிங்களாந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம், வடுகம், நாமகிரிப்பேட்டை, தொப்பம்பட்டி, வடுகம் முனியப்பம்பாளையம், புதுப்பட்டி, சந்திரசேகரபுரம், குருசாமிபாளையம், கல்யாணி, அம்மாபாளையம், மலையாம்பட்டி, வேலம்பாளையம், பூசாரிபாளையம்

உள்ளிட்ட ஊர்களிலிருந்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பருத்தி கொண்டு வந்தனர்.

மொத்தம் 942 மூட்டைகள் ஏலத்தில் விடப்பட்டன. டி.சி.எச். ரகம் ஒரு குவிண்டாலுக்கு குறைந்தபட்சமாக ரூ.4,141-க்கும், அதிகபட்சமாக ரூ.4,959-க்கும், ஆர்.சி.எஸ். ரகம் ஒரு குவிண்டாலுக்கு குறைந்தபட்சமாக ரூ.3,792-க்கும், அதிகபட்சமாக ரூ.4,346-க்கும் ஏலம் போனது.

திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் ரூ.16 லட்சத்துக்கு வர்த்தகம் நடைபெற்றது.

திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, திருப்பூர், சேலம், ஆத்தூர், கொங்கணாபுரம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தி மூட்டைகளை ஏலத்தில் எடுத்தனர்.

**விவசாயக் குழுக்களுக்கு ரூ.46 லட்சத்தில் வேளாண் இயந்திரங்கள் அளிப்பு**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயக் குழுக்களுக்கு ரூ.45.66 லட்சத்தில் வேளாண் இயந்திரங்களை அண்மையில் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வழங்கினார்.

காவேரிப்பட்டணம் அருகே பையூர் தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழக மண்டல ஆராய்ச்சி மையம் சார்பில், விவசாயக் குழுக்களுக்கு வேளாண் இயந்திரங்கள், உபகரணங்கள் வழங்கும் விழா ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமை வகித்துப் பேசியது:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பின் தங்கிய பகுதியான சூளகிரி வட்டாரம் வளர்ச்சியிலும் பின் தங்கி உள்ளது. இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் அதிகளவு மானாவரியில் சாகுபடி செய்து வருகின்றனர். ஆள்கள் பற்றாக்குறை உள்ளது. இதனால், சரியான பருவத்தில் வேளாண் பணிகளை மேற்கொள்ள முடியாத நிலை உள்ளது.

இந்த விவசாயிகளின் நலன் கருதி அதிக மகசூல், சரியான விளைச்சல், சரியான பின்செய் நேர்த்திகள் செய்ய வைக்கும் நோக்கில், சிறு, குறு, விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படுகிறது.சூளகிரி வட்டாரத்தில் உள்ள காமன்தொட்டி, ஏனுசோனை, சானமாவு ஆகிய 3 ஊராட்சிகளில் உள்ள குக்கிராமங்களில் செயல்பட்டு வரும் விவசாயக் குழுக்களுக்கு இந்த இயந்திரங்கள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு விவசாயக் குழுவுக்கும் தலா ஒரு மினி டிராக்டர், பவர் வீடர் டீசல் 2, பவர் வீடர் பெட்ரோல் 2, களை எடுக்கும் கருவி 2 மற்றும் 8 வகை இணைப்பு உபகரணங்களும் வழங்கப்படுகின்றன.இந்த இயந்திரங்கள் இப்பகுதி விவசாயிகளுக்குத் தேவையான வேளாண், தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யவும், அறுவடை மேற்கொள்ளவும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சபா நடேசன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் மந்திராசலம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (ஊரக வளர்ச்சி) கோபாலகிருஷ்ணன், வேளாண் பல்கலைக் கழக பேராசிரியர்கள் புத்தர், விஜயபாஸ்கரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**பண்ருட்டி பகுதியில் பலா விளைச்சல் அமோகம்**

பண்ருட்டி வட்டாரத்தில் பலாப்பழ விளைச்சல் அதிகரித்துள்ளதால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

பண்ருட்டி, கெடிலம் நதிக்கு வடபகுதியில் வளம் நிறைந்த செம்மண் பூமியில் பலா மரங்கள் செழித்து வளர்கின்றன. கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டியில் சுமார் 635 ஹெக்டேர் பரப்பளவில் பலா மரங்கள் உள்ளன. அனேக கிராமங்களில் வரப்பு பயிராகவும், மேலிருப்பு, பெரியகாட்டுப்பாளையம், மேல்மாம்பட்டு, சாத்திப்பட்டு ஆகிய கிராமங்களில் முழு அளவிலும் பயிர் செய்கின்றனர்.

தானே புயலின்போது இப்பகுதியில் இருந்த பெரும்பாலான மரங்கள் சேதம் அடைந்தன. புயலில் சேதம் அடைந்து எஞ்சி நின்ற மரங்கள் தற்போது காய்க்கத் தொடங்கி உள்ளன. பலா மரங்களில் அதிக அளவில் காய் காய்த்துள்ளது. தற்போது அறுவடை சீசன் என்பதால் சந்தைக்கு பலா பழத்தின் வரத்து அதிகரித்துள்ளது. விளைச்சல் அதிகரிப்பு காரணமாக இதன் விலை சரிவடைந்துள்ளது. சந்தையில் பெரிய பழம் ஒன்றின் விலை ரூ.100 முதல் ரூ.150 வரையில் விற்பனை செய்யப்படுகிறது. வியாபாரிகள் பலாப்பழத்தை வாங்க வராததால் கிராமப் பகுதிகளில் பலாப் பழத்தின் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த நான்கு ஆண்டுகளாக விளைச்சல் இன்றி பாதிக்கப்பட்டு வந்த விவசாயிகள் தற்போது விலை வீழ்ச்சி காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்தனர்.

**பதநீர் சீசன் எதிரொலி கருப்புக்கட்டி விலை மேலும் சரிவு**

பதநீர் சீசன் எதிரொலியாக திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் கருப்புக்கட்டி விலை மேலும் குறைந்துள்ளது.

உலகம் முழுவதும் சர்க்கரை (சீனி) பயன்பாடு அதிகமாக உள்ளபோதிலும், தமிழகத்தில் மருத்துவக் குணம் மிகுந்ததாகப் பார்க்கப்படும் கருப்புக்கட்டிகளின் பயன்பாடு பல வீடுகளில் தொடர்ந்து வருகிறது. தமிழகத்தின் பல்வேறு பதார்த்தங்களிலும் கருப்புக்கட்டிகள் பயன்படுத்தப்படுகிறது.திருநெல்வேலி மாவட்டத்தில் திசையன்விளை சுற்றுவட்டாரப் பகுதிகளிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் உடன்குடி, வேம்பார், பேய்க்குளம், செட்டிக்குளம், பரமன்குறிச்சி, சாத்தான்குளம், திருச்செந்தூர் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் கருப்புக்கட்டி உற்பத்தி அதிகளவில் நடைபெறுகிறது. கோடைக்காலம் தொடங்கியுள்ளதால் பதநீர் சீசன் களைகட்டியுள்ளது. இதனால் கருப்புக்கட்டிகளின் விலை மேலும் குறைந்துள்ளது.இதுகுறித்து வியாபாரிகள் கூறியதாவது: ஏப்ரல்

இறுதியில் தொடங்கும் பதநீர் சீசன் ஆகஸ்ட் மாதத்தின் 2ஆம் வாரம் வரை நீடிக்கும். இந்த ஆண்டில் மழை அதிகம் பெய்துள்ளதால் பதநீர் உற்பத்தியும், அதன் எதிரொலியாக கருப்புக்கட்டி உற்பத்தியும் கடந்த ஆண்டைவிட அதிகரிக்க வாய்ப்புள்ளது.

கடந்த ஆண்டில் கருப்புக்கட்டிகளின் உற்பத்தி அடியோடு பாதிக்கப்பட்டதால் 10 கிலோ சிப்பம் ரூ.3 ஆயிரத்துக்கு விற்பனையானது. இந்த ஆண்டில் கோடை தொடங்கியதுமே கருப்புக்கட்டி விலை ரூ.1,500ஆக சரிந்தது. இப்போது கருப்புக்கட்டி உற்பத்தி மேலும் அதிகரித்துள்ளதால் ரூ.1,400ஆக குறைந்துள்ளது.

உடன்குடி ரகம் கிலோ ரூ.140-க்கும், வேம்பார் ரகம் ரூ.120-க்கும், ஆலந்தூர் ரகம் கிலோ ரூ.80-க்கும் விற்பனையாகிறது. உடன்குடி பகுதி பனைமரங்களில் இனிப்புச்சுவை மிகவும் அதிகம்; வேம்பார் மற்றும் ஆலந்தூர் பகுதிகளில் கிடைக்கும் பதநீரின் சுவை சற்று மாறுதலாக இருக்கும். அதனால்தான் விலையில் சற்று வித்தியாசங்கள். ஆனால், ஏதேனும் ஒரு ரகத்தை தொடர்ந்து பயன்படுத்துவோர் அதனை மாற்றுவதில்லை. இதேபோல ஈரோடு, சேலம் மாவட்டங்களில் இருந்து வெல்லம் விற்பனைக்கு வருகிறது. இவை கிலோ ரூ.35-க்கு விற்பனையாகிறது என்றனர்.

**நெல்லை மாவட்டத்தில் காற்றாலை மின்உற்பத்தி அதிகரிப்பு**

திருநெல்வேலி மாவட்டத்தில், காற்றாலை மின்உற்பத்தி அதிகரித்துள்ளதாக மின்வாரிய வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழகத்தில் நெல்லை, ஈரோடு மண்டலங்களில் காற்றாலை மின்உற்பத்தி நிலையங்கள் அதிகளவில் உள்ளன. இரு மண்டலங்களிலும் சேர்த்து தினமும் 4 ஆயிரம் மெகாவாட் வரை மின்உற்பத்தி செய்ய முடியும். இதில் அதிகபட்சமாக 3,500 மெகாவாட் வரை தமிழ்நாடு மின்சார வாரியத்தால் வாங்கப்படுகிறது.

திருநெல்வேலி மண்டலத்தின் கீழ், திருநெல்வேலி மாவட்டத்தில் பணகுடி, காவல்கிணறு, பழவூர், வீராணம், ஆலங்குளம், ராதாபுரத்திலும், தூத்துக்குடி மாவட்டத்தில் கயத்தாறு பகுதியிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழி பகுதியிலும் காற்றாலை மின்உற்பத்தி நிறுவனங்கள் உள்ளன.

6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காற்றாலைகள் சுழல்கின்றன. இவற்றில் 2 நாள்களாக மின்உற்பத்தி அதிகரித்துள்ளது.இதுகுறித்து மின்வாரிய வட்டாரங்கள் கூறுகையில், திருநெல்வேலி மாவட்ட காற்றாலைகளில் கடந்த மாதத்தில் ஒரு சில நாள்கள் மின்உற்பத்தி பூஜ்ஜியத்துக்குகூட சென்றது. ஆனால், இப்போது மாலை, இரவில் காற்றின் வேகம் சற்று அதிகரித்திருப்பதால் பூஜ்ஜியம் நிலையிலிருந்த காற்றாலைகள் நிறுவனங்கள்கூட 1 முதல் 5 மெகாவாட் உற்பத்திக்கு முன்னேறியுள்ளன. வழக்கமாக மே 20}க்கு பின்பு காற்றாலை உற்பத்தி அதிகரிக்கும். கேரள மாநிலத்தில் பருவமழை தொடங்கும்போது தமிழகத்தில் காற்றாலை மின்உற்பத்தி உச்சத்தை நெருங்கும். ஜூன், ஜூலையில் காற்றாலை உற்பத்தி மிகவும் அதிகரிக்கும். இந்த ஆண்டும் அந்நிலை தொடரும் என்ற நம்பிக்கையில் உள்ளோம் என்றனர்.

**பாத்திரம், இலை, காகிதப் பை துணிப் பைகளைப் பயன்படுத்துவீர் மாநகராட்சி ஆணையர் வேண்டுகோள்**

திருச்சி மாநகர மக்கள் பாலிதீன் பைகளைப் பயன்படுத்துவதைக் குறைத்துக் கொண்டு பாத்திரங்கள், இலை, காகிதப் பை மற்றும் துணிப் பைகளைப் பயன்படுத்தி சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் உறுதுணையாக இருக்க வேண்டும் என மாநகராட்சி ஆணையர் மு. விஜயலட்சுமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

திருச்சி மாநகராட்சிக்குள்பட்ட அனைத்துப் பகுதிகளிலும் 40 மைக்ரான் தடிமனுக்கு குறைவான பிளாஸ்டிக் பைகள் பயன்பாடு தடை செய்யப்பட்டுள்ளது. இந்த வகை பிளாஸ்டிக் பைகளை இருப்பு வைப்போர், விற்பனை செய்வோர் மீது ரூ. 1 லட்சம் அபராதம் விதிக்கப்படும்.

திருமண மண்டபங்கள், கூட்ட அரங்குகளில் பிளாஸ்டிக் டம்ளர் மற்றும் இதர பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்தக் கூடாது. மீறினால் அபராதம் விதிக்கப்படும். கறிக்கடைகள், காய்கறிக் கடைகள், டீக்கடைகள், தள்ளுவண்டியில் வியாபாரம் செய்வோர் பிளாஸ்டிக் பைகளை விநியோகிக்கக் கூடாது.பொதுமக்கள் கடைகளுக்குச் செல்லும்போது பாத்திரங்கள், துணிப்பை எடுத்துச் செல்ல வேண்டும். பூ வியாபாரிகள் இலை அல்லது காகிதப் பைகளைப் பயன்படுத்த வேண்டும். மருந்துக் கடைகளிலும் பிளாஸ்டிக் பைகளைப் பயன்படுத்தக் கூடாது.

கடந்த இரு நாள்களாக புத்தூர் மார்க்கெட், பெரியகடை வீதி பகுதிகளில் நடைபெற்ற ஆய்வில் பிளாஸ்டிக் பைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. தொடர்ந்து ஆய்வுகள் நடத்தப்படும். சட்டப்படி ரூ. 1 லட்சம் அபராதம் விதிக்கப்படும்.மேலும், பிளாஸ்டிக் கழிவுகளை மாநகராட்சி குப்பைத் தொட்டியில் அல்லது திறந்த வெளியில் போடாமல் மாநகராட்சிப் பணியாளர்களிடம் வழங்கி மாநகரை தூய்மையாகப் பராமரிப்பதில் உதவ வேண்டும்.

**"உணவு தானிய உற்பத்தி இலக்கு 1.06 லட்சம் டன்**

கரூர் மாவட்டத்தின் உணவு தானிய உற்பத்தி இலக்காக 1.06 லட்சம் மெட்ரிக் டன்னாக நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கரூர் மாவட்டத்தின் கோடை கால சராசரி மழையான 64.30 மி.மீட்டருக்கு இதுவரை 89.86 மி.மீ. கிடைக்கப் பெற்றுள்ளது. இது சராசரி மழை அளவைக்காட்டிலும் 25.6 மி.மீ. கூடுதல். கோடைப்பருவத்தில் இதுவரை 95 எக்டேரில் நெல்லும், 3,098 எக்டேரில் சிறுதானிய பயிர்களும், 3,769 எக்டேரில் பயறுவகை பயிர்களும், 3,795 எக்டேரில் எண்ணெய் வித்துப்பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டு வளர்ச்சி மற்றும் அறுவடை நிலையில் உள்ளது.

கரூர் மாவட்டத்தில் 2014-15-ம் நிதியாண்டில் 74,328 எக்டேரில் வேளாண் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தின் உணவு தானிய உற்பத்தி இலக்காக 1.06 லட்சம் மெட்ரிக் டன் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பயிர் மகசூல் காரணிகள் கணக்கீடு முறையில் கணிக்கப்பட்டுள்ள மகசூல்படியும் அனைத்து உணவு தானியப் பயிர்களில் மொத்த உற்பத்தி 1.50 லட்சம் மெட்ரிக் டன் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.மேலும் நிதியாண்டில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில் 78.44 மெட்ரிக் டன் சான்று பெற்ற நெல் விதைகள் 1570 விவசாயிகளுக்கு ரூ. 8.06 லட்சம் மானிய உதவி வழங்கப்பட்டது. சிறுதானிய உற்பத்தியைப் பெருக்குவதற்காக ரூ.15.64 லட்சம் மதிப்பில் மானியம் மற்றும் இடுபொருட்கள் உதவியாக 500 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. பயறுவகை பயிர்களின் உற்பத்தியைப் பெருக்கிட துவரை நாற்று விட்டு நடுவதற்கு எக்டேருக்கு ரூ. 7,500 வீதம் 400 விவசாயிகளுக்கு ரூ.30 லட்சம் மானிய உதவியாக வேளாண் துறை சார்பில் அனைத்து வட்டாரங்களிலும் வழங்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் உள்ள அனைத்து தனியார் உரக்கடைகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்களில் யூரியா-1,360 மெ.டன், டிஏபி-312 மெ.டன், பொட்டாஷ்-677 மெ.டன், கலப்பு உரங்கள்-754 டன் உரங்கள் இருப்பில் உள்ளன என்றார் அவர்.

**கத்திரி வெயில் தொடக்க நாளில் மழை**

கத்திரி வெயில் தொடக்க நாளான திங்கள்கிழமை (மே 4) பிற்பகலில், புதுக்கோட்டையில் பெய்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த 4 மாதங்களாக மழை இல்லாத நிலையில், கடந்த மாதம் 13-ம் தேதி வெப்பத்தைத் தணிக்கும் வகையில் மழை பெய்தது. வறண்டுப் போன பூமிக்கும், வெப்பத்தால் வாடிய மக்களுக்கும் மகிழ்ச்சிதரும் வகையில் அமைந்திருந்தது.

தற்போது, திங்கள்கிழமை (மே 4) பிற்பகலில் பெய்த மழை விவசாயிகளுக்கு நம்பிக்கை அளித்துள்ளது. மாவட்டத்தில் மழையளவைப் பொருத்தவரை 2014 -ம் ஆண்டில் இயல்பான மழையளவான 925 மி.மீ.க்கு மாறாக 751 மிமீ மழைப் பொழிவுவே இருந்தது. 2015-ல் மார்ச் மாதத்தில் கிடைக்க வேண்டிய இயல்பான மழை அளவு 30.56 மி.மீ.க்கு மாறாக 3.96 மி.மீ. மழையே கிடைத்தது. இதன்காரணமாக, மாவட்டத்திலுள்ள சுமார் 5000-க்கும் மேற்பட்ட குளங்கள் வறண்டுப் போனதால், கடந்த 2 மாதங்களாக கால்நடைகளுக்கும், பொதுமக்களுக்கும் குடிநீர்த் தட்டுப்பாடு தலை காட்டத் தொடங்கியது.இந்நிலையில், திங்கள்கிழமை (மே 4) கத்திரி வெயில் தொடங்கி இம்மாதம் 29 -ம் தேதி வரை நீடிக்குமென தகவல் வெளியானது. திங்கள்கிழமை பிற்பகல் சுமார் 2 மணியளவில் பலத்த காற்றுடன் தொடங்கிய மழை, சுமார் 30 நிமிடங்கள் நீடித்தது. இதனால் ஏற்பட்ட குளிர்ச்சி காரணமாக கத்திரி வெயிலின் தாக்கத்தில் புழுங்கித் தவித்த புதுக்கோட்டை நகர மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

**"மானிய உரங்களை விவசாயிகளுக்கு மட்டுமே விற்க வேண்டும்'**

மானியத்தில் வழங்கப்படும் உரங்களை விவசாயிகளுக்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2014-2015 ஆம் ஆண்டு பெரம்பலூர் மாவட்டத்துக்கு 12,378 மெட்ரிக் டன் யூரியா, 2,226 மெட்ரிக் டன் டி.ஏ.பி, 4,374 மெட்ரிக் டன் பொட்டாஷ், 14,086 மெட்ரிக் டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

நிகழாண்டுக்கு, பயிர்களின் உரத் தேவைகளை கணக்கிட்டு அதற்கு ஏற்றவாறு முன்கூட்டியே வாங்கி இருப்பு வைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. உர விற்பனையாளர்கள் தேவையான உரங்களை முன்கூட்டியே கொள்முதல் செய்து உரிய நேரத்தில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.

விவசாய பயன்பாட்டுக்காக ராசயன உரங்களுக்கு மத்திய அரசு மானியம் வழங்கி வருகிறது. நேரடி விவசாய பயன்பாட்டுக்கு மட்டுமே இந்த உரங்களைப் பயன்படுத்த வேண்டும். விற்பனையாளர்கள், மானியத்தில் வழங்கப்படும் உரங்களை விவசாயிகளுக்கு மட்டுமே விற்பனை செய்ய வேண்டும்.தொழிற்சாலைகளுக்கு விற்பனை செய்வது உரக்கட்டுப்பாட்டு ஆணையை மீறிய செயலாகும். எனவே, உரங்களை அதிக விலைக்கு விற்பது, ரசீது இல்லாமல் விற்பனை செய்வது, விவசாயம் அல்லாத பிற தொழில்களுக்கு விற்பனை செய்வது கண்டறியப்பட்டால், அவர்கள் மீது உரக்கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்.

## தமிழகத்தில் வீடுகளில் சூரிய மின்தகடு அமைக்க 2,715 பேர
## ுக்கு அனுமதி



சென்னை,

தமிழகத்தில் வீடுகளில் சூரியமின்தகடு மேற்கூரை அமைக்க 2 ஆயிரத்து 715 பேருக்கு அனுமதி அளிக்கப்பட்டதில், முதல் கட்டமாக 547 வீடுகளில் உற்பத்தி தொடங்கப்பட்டு உள்ளது. சூரியமின்தகடுமேற்கூரை

தமிழ்நாட்டில் மின்சார தட்டுப்பாட்டை நிரந்தரமாக போக்குவதற்காக முன்னாள் முதல்-அமைச்சர் ஜெயலலிதா கடந்த 2013-ம் ஆண்டு சூரிய மின்சக்தி கொள்கையை வெளியிட்டார். முதல் கட்டமாக 10 ஆயிரம் வீடுகளுக்கு சூரியமின்தகடு மேற்கூரை அமைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. அதன்படி இந்த பணி மாநிலம் முழுவதும் நடந்து வருகிறது.சோலார் பேனல் அமைக்கும் முறையில் 5 ஏக்கர் நிலத்தில் மெகாவாட் கணக்கில் மின்சாரம் உற்பத்தி செய்வது மற்றும் வீட்டு

கட்டிடங்களுக்கு 1 கிலோவாட் முதல் 100 கிலோவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்வது ஆகிய 2 முறைகளில் அமைக்க அனுமதிக்கப்படுகிறது.

முதல் கட்டமாக வீடுகளுக்கு 1 கிலோ வாட் என்ற அளவில் அமைப்பதற்கு மட்டும் மானியம் வழங்கப்படுகிறது. ஒரு கிலோ வாட் திறன் கொண்ட சோலார் பேனல் அமைக்க 10 சதுர அடி இடம் மட்டுமே போதுமானது. மாறாக ஏக்கர் கணக்கில் அமைப்பவர்களுக்கு மானியம் வழங்கப்படுவதில்லை.அரசு அலுவலகங்கள் வீடுகள் உள்ளிட்ட கட்டிடங்களில் சோலார் பேனல் அமைக்க ரூ.47 ஆயிரம் முதல் ரூ.60 ஆயிரம் வரை வீட்டு உரிமையாளர்கள் செலவிட வேண்டிவரும். அதற்கு மேல் ஆகும் தொகைக்கு மானியமாக ரூ.20 ஆயிரம் மாநில அரசு வழங்குகிறது. மீதம் உள்ள தொகைக்கு மத்திய அரசிடமிருந்து 30 சதவீத மானியத்தை தமிழக அரசு பெற்று தருகிறது.புதிதாக கட்டப்படும் அரசு அலுவலக கட்டிடங்கள் மற்றும் பழைய அரசு அலுவலக கட்டிடங்களில் படிப்படியாக சூரிய மேற்கூரை மின் அமைப்பினை ஏற்படுத்த வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது. அதுபோல ஊராட்சி அலுவலகம், பேரூராட்சி அலுவலகம், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் சோலார் பேனல் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இதுகுறித்து எரிசக்தி துறை அதிகாரிகள் கூறியதாவது:-300 நாட்கள் உற்பத்தி காற்றாலை மற்றும் புனல் மின்சார நிலையங்கள் சீசன் காலங்களில் மட்டுமே எதிர்பார்த்த அளவு மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றன. ஆனால் ஆண்டுக்கு சராசரியாக 300 நாட்கள் சூரிய வெப்பம் இருப்பதால் சூரிய சக்தி மின்கூரை அமைக்க நல்ல வரவேற்பு உள்ளது. இதன் மூலம் தினமும் குறைந்தபட்சம் 4.5 முதல் 5 யூனிட்கள் வரை மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும். இந்த மின்சாரத்தைக் கொண்டு ஒரு வீட்டில் 4 டியூப் லைட்டுகள், இரண்டு மின்விசிறிகள், ஒரு

தொலைக்காட்சி பெட்டியை பயன்படுத்திக் கொள்ளலாம். மின்சாரப் பயன்பாடு அதிகமாக இருந்தால் சோலார் பேனல் மூலம் கிடைக்கும் மின்சாரம் போக மீதமுள்ள மின்சாரத்தை ‘கிரிட்’ மூலம் பெற்று பயன்படுத்திக் கொள்ளலாம்.2,715 விண்ணப்பங்கள

சூரிய மேற்கூரை அமைக்கும் திட்டத்தின் கீழ் வீடுகளுக்கு 1 கிலோ வாட் திறன் கொண்ட மேற்கூரை அமைக்க 2 ஆயிரத்து 715 பேரின் விண்ணப்பங்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. இதில் முதல் கட்டமாக 547 வீடுகளில் அமைக்கப்பட்டுள்ளது

இதன் மூலம் சராசரியாக மாநிலம் முழுவதும் 2 ஆயிரத்து 735 யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

ஆன்-லைனில் விண்ணப்பிப்பது எப்படி?

ஒருவர் தனது வீட்டுக்கு சோலார் பேனல் அமைத்து அதன்மூலம் சூரிய மின்சக்தி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்து பயன்படுத்த விரும்பினால் ஆன்-லைனிலேயே விண்ணப்பிக்கலாம். தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமையின் இணையதளத்தில் ஷ்ஷ்ஷ்.மீ மீபீணீ.வீஸீ இ-பார்ம்ஸை கிளிக் செய்ய வேண்டும். அதில் டொமஸ்டிக் கிளிக் செய்தால் விண்ணப்ப படிவம் வந்துவிடும். அதில் கேட்டுள்ள விவரங்களை முழுமையாக பூர்த்தி செய்து மேற்கண்ட இணையதள முகவரிக்கு அனுப்பிவிட வேண்டும். விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகைச் சீட்டு ஆன்-லைனிலேயே அனுப்பப்படும்.இந்த இணையதளத்தில் சோலார் பேனல் விற்பனையில் ஈடுபட்டுள்ள 17 கம்பெனிகளின் பட்டியலும் இடம் பெற்றிருக்கும். அதில் ஏதாவது ஒரு கம்பெனியை வீட்டு உரிமையாளர் தேர்வு செய்து விண்ணப்பப் படிவத்தில் தெரிவிக்கலாம்.

ஒவ்வொரு வீட்டுக்கும் அதிகபட்சம் 1 கிலோ வாட் (1000 வாட் அவர்) திறன் கொண்ட சோலார் பேனலுக்கு மட்டுமே அரசு மானியம் கிடைக்கும். இந்த திட்டத்தை விரைவுப்படுத்துவதற்காக

விண்ணப்பங்கள் 30 நாள் கால அவகாசத்தில் பரிசீலனை செய்து அனுமதி வழங்கப்படுகிறது. இதன் மூலம் மாதம் 150 விண்ணப்பங்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது.மொட்டை மாடி ஒரு கிலோ வாட் திறன் கொண்ட சோலார் பேனல் (பேட்டரி இல்லாமல்) அமைப்பதற்கு ரூ.1 லட்சத்து 10 ஆயிரம் செலவாகும். சோலார் பேனல் அமைக்கும்போது கம்பெனிக்கு மத்திய அரசின் 30 சதவீத மானியத் தொகையை கழித்துக் கொண்டு வீட்டு உரிமையாளர் கொடுத்தால், அந்த மானியத்தொகை கம்பெனிக்கு அனுப்பி வைக்கப்படும். ஒருவர் தனது வீட்டு மொட்டை மாடியில் சோலார் பேனல் வைத்த பிறகு அந்தந்த மாவட்டத்தில் உள்ள உதவி பொறியாளர் ஆய்வு செய்து, தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமைக்கு தகவல் தெரிவிப்பார். அதன்பிறகு ஒரு மாதத்திற்குள் மானியத் தொகை வழங்கப்பட்டுவிடும். இவ்வாறு அந்த அதிகாரி கூறினார்.

**பி.பி.சி.எல். எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தில் மீண்டும் மின் உற்பத்தி தொடக்கம் புதுச்சேரி மின்திறல் குழுமம் தலைவர் சிவா தகவல்**

போலகத்தில் உள்ள பி.பி.சி.எல். எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தில், பல மாதங்களுக்கு பிறகு மீண்டும் மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது என்று புதுச்சேரி மின்திறல் குழுமம் தலைவர் பி.ஆர்.சிவா எம்.எல்.ஏ தெரிவித்துள்ளார்.**எரிவாயு மின் உற்பத்தி நிலையம்**காரைக்காலை சேர்ந்த திருபட்டினம் போலகத்தில், புதுச்சேரி மின்திறல் குழுமத்திற்கு சொந்த மான 32.5 மெகாவாட் திறனுள்ள எரிவாயு மின் உற்பத்தி நிலையம் செயல்பட்டு வருகிறது. 22.9 மெகாவாட் மின்சாரமானது நரிமணத்திலிருந்து பெறப்படும் எரிவாயு டர்பைன் மூலமாகவும், 9.6 மெகா வாட் மின் சாரமானது ஸ்டீம் டர்பைன் மூலமாகவும் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தி செய்யப்படும் 32.5 மெகாவாட் மின்சாரம், திருபட்டினம் பகுதியில் இயங்கி வரும்

தொழிற்சாலைகளுக்கும், மாவட்டத்தின் தெற்கு எல்லையான வாஞ்சூர் முதல் காரைக்கால் அரசலாற்றின் தென்பகுதி வரை உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கும் விநியோகம் செய்யப்படுகிறது. **பழுதான எந்திரம்**இந்நிலையில், மேற்கண்ட மின் உற்பத்தி நிலையத்தில் உள்ள மின்சாரம் உற்பத்தி செய்யக் கூடிய மிகவும் முக்கிய கருவியான 11 கிலோவாட் ஜெனரேட்டரில் உள்ள காயில் கடந்த ஆண்டு நவம்பர் மாத நடுவில் பழுதடைந்தது. இதனால் மின்உற்பத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. ஐதராபாத்திலிருந்து அந்த ஜெனரேட்டரை உற்பத்தி செய்த நிறுவனத்தை சேர்ந்த வல்லுனர்கள் வந்து பார்வையிட்டு பழுதை சரிசெய்ய முயன்றனர். ஆனால் முடியவில்லை. எனவே ஐதராபாத்திற்கு கொண்டு செல்லப் பட்ட ஜெனரேட்டர் காயில் அங்கு சுமார் ரூ.5 கோடி செலவில் பழுது நீக்கப்பட்டதாக கூறப்படுகிறது. புதுச்சேரி மின்திறல் குழுமம் தலைவர் பி.ஆர்.சிவா எம்.எல்.ஏ மற்றும் பொறியாளர்கள் ஐதராபாத் சென்று அங்கு ஜெனரேட்டர் பழுதுநீக்கும் பணிகளை பார்வையிட்டு துரிதப் படுத்தி வந்தனர். இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பழுது சரிசெய்யப்பட்ட ஜெனரேட்டர் கருவி, மின் உற்பத்தி நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டு கிரேன் உதவியுடன் பொருத்தப்பட்டது. தொடர்ந்து அந்நிறுவனத்தை சேர்ந்த தொழில்நுட்ப வல்லுனர்கள் முன்னிலையில் இயக்கி சோதனை மேற்கொள்ளப் பட்டது. **மீண்டும் மின் உற்பத்தி**இதுகுறித்து புதுச்சேரி மின்திறல் குழுமம் தலைவர் பி.ஆர்.சிவா எம்.எல்.ஏ கூறியதாவது;-பவர் கார்ப்பரேசன் நிறுவனத்திற்கு சொந்தமான மின் உற்பத்தி நிலையத்தில் உள்ள கருவிகள் பொருத்தப் பட்டு சுமார் 15 ஆண்டுகள் ஆகின்றன. எனவே மார்ச் மாதம் கருவிகளை ஓவர்ஹாலிங் செய்ய திட்டமிடப்பட்டு இருந்தது. அதற்குள் கடந்த ஆண்டு இறுதியில் ஜெனரேட்டர் கருவி பழுதடைந்தது. இதனால் கடந்த 4-5 மாதங்களாக மின்உற்பத்தி செய்ய

முடியாமல் போனது.தற்பொழுது ஜெனரேட்டர் பழுது சரிசெய்யப்பட்டதுடன், கருவிகளும் சீர் செய்யப்பட்டு கடந்த சில தினங்களாக சோதனை முறையில் மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டது. தற்பொழுது புதுச்சேரி மின்திறல் குழுமத்திற்கு சொந்தமான இந்த எரிவாயு மின் உற்பத்தி நிலையத்தில் முழு அளவில் மீண்டும் மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**கோவையில் இடி மின்னலுடன் பலத்த மழை அக்னி நட்சத்திரம் தொடக்க நாளில் மழை பெய்ததால் மக்கள் மகிழ்ச்சி**



கோவையில் இடி மின்னலுடன் நேற்று பலத்த மழை பெய்தது. அக்னி நட்சத்திரம் தொடக்க நாளில் மழை பெய்ததால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

வெயிலின் உக்கிரம்கோவையில் கடந்த சில நாட்களாக வெப்பம் அதிகரித்து வந்தது. மிதமான வெப்பநிலை நிலவும் கோவையிலேயே சில நாட்களில் வெயில் அளவு 100 டிகிரியை தொட்டது. இதனால் கோவை மக்கள் மிகவும் அவதிப்பட்டு வந்தனர். இதனால் பகல் நேரங்களில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. சாலைகளில் இரு சக்கர வாகனங்களில் சென்றவர்கள் அனல் காற்று தாக்கத்தினால் அவதிப்பட்டனர்.இந்த நிலையில் அக்னி நட்சத்திரம் நேற்று

தொடங்கியது. சாதாரண நாட்களிலேயே கோவை மக்களை வாட்டி வதைத்த வெயில் நேற்று அதன் உக்கிரம் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்த்தது போலவே கோவையில் நேற்றுக்காலையில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் நேற்றைய வெயில் அளவு 96.4 டிகிரியாக இருந்தது.திடீர் மழை ஆனால் மதியம் 5 மணியளவில் கோவை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் பலத்த மழை பெய்தது. கோவையை அடுத்த பன்னிமடை, கணுவாய், சின்னதடாகம், நரசிம்மநாயக்கன்பாளையம், தொப்பம்பட்டி, கவுண்டம்பாளையம் ஆகிய பகுதிகளில் தொடர்ந்து 30 நிமிடம் இடி மின்னலுடன் பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழை தேங்கியது. போத்தனூர், மதுக்கரை, சரவணம்பட்டி, கணபதி, கோவில்பாளையம் ஆகிய பகுதிகளிலும் தொடர்ந்து மழை பெய்தது. கோவை மாநகரில் மாலை 5 மணி முதல் லேசாக மழை பெய்தாலும் 6 மணி முதல் பலத்த மழை பெய்தது. பீளமேடு, சிங்காநல்லூர், டவுன்ஹால், ஆர்.எஸ்.புரம், வீரகேரளம், வேடப்பட்டி ஆகிய பகுதிகளில் இடி-மின்னலுடன் மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழை தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இந்த திடீர் மழையினால் கோவையில் மாலையில் இதமான காலநிலை நிலவியது. அக்னி நட்சத்திரம் தொடங்கிய நாளில் மழை பெய்து குளிர்ச்சியை ஏற்படுத்தியதால் கோவை மக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.பொள்ளாச்சி பொள்ளாச்சி பகுதியில் நேற்று மாலை 4 மணிக்கு இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் சாலைகளில் மழை வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. மழை காரணமாக நெகமம் அருகே செட்டியக்காபாளையத்தில் பழமையான அரச மரம் ஒன்று ரோட்டில் சாய்ந்து விழுந்தது. இதனால் அந்த பகுதியில் போக்குவரத்து

பாதிக்கப்பட்டது. ஆனைமலை, வால்பாறை, கிணத்துக்கடவு பகுதிகளிலும் சுமார் ஒரு மணி நேரம் பலத்த மழை பெய்தது.

**கடலூரில் மாம்பழ சீசன் தொடங்கியது ஒரு கிலோ பங்கனபள்ளி ரூ.60–க்கு விற்பனை**



கடலூரில் தற்போது மாம்பழ சீசன் தொடங்கி இருக்கிறது. ஒரு கிலோ பங்கன பள்ளி மாம்பழம் ரூ.60–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

மாம்பழ சீசன்முக்கனிகளில் முதல் இடத்தை பிடித்துள்ளது மாங்கனி. பலாப்பழம், தர்பூசணி போன்றவற்றின் வரிசையில் தற்போது கடலூரில் மாம்பழ சீசனும் தொடங்கி இருக்கிறது. பழக்கடைகளில் பலவகையான மாம்பழங்களை விற்பனைக்காக அடுக்கி வைத்திருப்பதை காண முடிகிறது. மேலும் சிறு வியாபாரிகள் தள்ளுவண்டிகளில் வைத்தும், தலைச்சுமையாக சுமந்து சென்றும் மாம்பழங்களை கூவி கூவி விற்பனை செய்யதை காண முடிகிறது.மாம்பழத்தை பொறுத்தவரை பங்கனப்பள்ளி, ஒட்டு, மல்கோவா, செந்தூரா என பலவகைகள் உள்ளன. என்றாலும் தற்போது பங்கனப்பள்ளி, செந்தூரா மற்றும் இமாபசிந்த் ஆகிய சில வகை மாம்பழங்களே அதிக அளவில் விற்பனை செய்யப்படுவதை காண முடிகிறது. அதாவது ஒரு கிலோ பங்கனப்பள்ளி ரூ.60–க்கும், செந்தூரா

ரூ40–க்கும், இமாபசிந்த் ரூ.120–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இதர வகை மாம்பழங்கள் விற்பனைக்கு வருவதற்கு இன்னும் 15 முதல் 20 நாட்கள் வரை ஆகும் என கூறப்படுகிறது.3 வகை மாம்பழம்

இதுகுறித்து கடலூரை சேர்ந்த மாம்பழ வியாபாரி ஒருவர் கூறும்போது கடலூரை பொறுத்தவரை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் கடைசி தொடங்கி ஆகஸ்ட் முதல் வாரம் வரை மாம்பழ சீசன் காலமாகும். இந்த ஆண்டுக்கான மாம்பழ சீசன் தொடங்கி விட்டது.

கடலூருக்கு சேலம், திருச்சி ஆகிய வெளி மாவட்டங்களில் இருந்து மாம்பழங்கள் விற்பனைக்கு வரவழைக்கப்படுகிறது. தற்போது பங்கனப்பள்ளி, செந்தூரா, இமாபசிந்த் ஆகிய 3 வகை மாம்பழங்கள்தான் அதிக அளவில் விற்பனைக்கு வருகின்றன. இன்னும் 15 முதல் 20 நாட்களுக்குள் நீலன், மல்கோவா, ஒட்டு போன்ற வேறு வகை மாம்பழங்களும் விற்பனைக்கு வரும் என்று கூறினார்.

பழைய தராசுகளை பயன்படுத்தி குறைந்த எடையில் விற்பனை

சாலையோரங்களில் தள்ளுவண்டிகளிலும், தரையிலும் அமர்ந்து பழ வியாபாரம் செய்யும் சில வியாபாரிகள் முத்திரையிடப்படாத எடை கற்கள், பழைய தராசு தட்டுகளை வைத்து குறைந்த எடையுடன் பழங்களை விற்பனை செய்வதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கிறார்கள்.இவர்களில் சிலரிடம் புதிய தராசுகள் முத்திரையிடப்பட்ட எடைக்கற்கள் இருந்தாலும் எடை போடுவதற்காக அவற்றை பயன்படுத்துவதில்லை. அதிகாரிகள் ஆய்வுக்கு வருவது தெரியவந்தால் அவசர அவசரமாக பழைய தராசு மற்றும் எடைகற்களை மறைத்து வைத்துவிட்டு புதிய தராசு, எடை கற்களை வைத்து நல்லவர்ளை போல நடந்துகொள்வதாகவும் கூறப்படுகிறது. எனவே இதை சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் ரகசியமாக கண்காணித்து

நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுகர்வோர் அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நாகை எட்டுக்குடி முருகன் கோவில் திருவிழாவுக்கு கீரமங்கலம் பகுதியில் இருந்து விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்ட பலா பழங்கள்**



நாகை மாவட்டம் எட்டுக்குடி முருகன் கோவில் திருவிழா விற்பனைக்காக கீரமங்கலம் பகுதியில் இருந்து பலா பழங்கள் விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்டன.எட்டுக்குடி முருகன் கோவில் திருவிழாபுதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலம், கொத்தமங்கலம், வடகாடு பலா பழங்கள் தனி சுவையும், நிறமும் நிறைந்தவை. இதனால் இப்பகுதி பலா பழங்களுக்கு கிராக்கி அதிகம். சென்னை, ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, திருவாரூர், நாகப்பட்டினம், தஞ்சாவூர் மற்றும் பல மாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் இங்கு வந்து பலா பழங்களை வாங்கி செல்கின்றனர். கடந்த சில ஆண்டுகளாக மும்பைக்கும் இப்பகுதியில் இருந்து பலா பழங்கள் அனுப்பப்பட்டு வருகின்றன.பலா பழங்கள் ஒரே இடத்தில் அதிகமாக விற்பனை ஆகும் இடம் நாகை மாவட்டம் எட்டுக்குடி ஆகும். எட்டுக்குடி கிராமத்தில் எழுந்தருளியுள்ள முருகன் கோவில் திருவிழாவில் ஆண்டு தோறும் ஒரே நாளில் சுமார் 50 லாரி பலா பழங்கள் விற்பனை ஆகும் என வியாபாரிகள் கூறுகின்றனர். திருவிழாவுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுப்புற கிராம மக்கள் விழா முடிந்து வீட்டுக்கு செல்லும் போது பலா பழங்களை வாங்கி செல்வது

வழக்கம்.லாரிகளில் ஏற்றி சென்றனர்இந்த ஆண்டு எட்டுக்குடி கோவில் திருவிழா இன்று (ஞாயிற்றுக்கிழமை) நடக்கிறது. அதனால் கீரமங்கலம், வடகாடு, கைகாட்டி பகுதிகளில் உள்ள கமிஷன் கடைகளுக்கு நாகை மாவட்ட வியாபாரிகள் மொத்தமாக பலா பழங்களை கடந்த சில நாட்களாக வாங்கி சென்ற வண்ணம் இருந்தனர். அதே போல புதுக்கோட்டை மாவட்ட பலா பழ வியாபாரிகளும், கீரமங்கலம் பகுதி விவசாயிகளும் பலா பழங்களை லாரிகளில் ஏற்றி சென்று திருவிழாவில் விற்பனைக்காக கொண்டு சென்றனர்.

**உழைப்புக்கு முதுமை தடையில்லை 85 வயதில் பனைமரம் ஏறி நுங்கு வெட்டி விற்பனை செய்யும் முதியவர்**



கொத்தமங்கலத்தில் 85 வயது முதியவர் ஒருவர் பனைமரம் ஏறி நுங்கு வெட்டி விற்பனை செய்து வருகிறார்.பனை மரம் ஏறும் முதியவர் கீரமங்கலம் அருகில் உள்ள கொத்தமங்கலம் பளுவான் தெருவை சேர்ந்தவர் செல்லையா (வயது 85). இவருக்கு 2 மகன்களும், ஒரு மகளும் உள்ளனர். அனைவருக்கும் திருமணம் நடந்துவிட்டது. இவரது மனைவி இறந்து விட்டார். செல்லையா மட்டும் தனியாக குடிசை போட்டு அதில் வசித்து வருகிறார். அன்றாட தன் தேவை களுக்கு தானே உழைத்து சம்பாதித்து கொள்கிறார். மகன்கள் உணவு கொடுத்தாலும் உழைப்பை விட முடியாது என்கிறார் இந்த 85 வயது முதியவர்.

ஒவ்வொரு காலகட்டத்திற்கு ஏற்ப தன் வேலையை செய்கிறார். தற்போது நுங்கு காலம் என்பதால் உயரமான பனைமரங்களில் ஏறி நுங்கு வெட்டி இறக்கி தனி ஆளாக மூட்டையில் கட்டி சைக்கிளில் ஏற்றி வந்து கொத்தமங்கலம் வாடிமாநகரில் விற்பனை செய்து வருகிறார்.உழைத்து பிழைக்க வேண்டும்இதுபற்றி செல்லையா கூறியதாவது:-
எனக்கு 85 வயது ஆகிறது. எனக்கு 2 மகன், ஒரு மகள். எல்லோருக்கும் கல்யாணம் ஆகிவிட்டது. நான் 15 வயசுல இருந்து பனை மரம் ஏறி நுங்கு வெட்டுவதும் பனை ஓலை வெட்டுவதும் தான் வேலை. பனை ஓலை வெட்டி காய வைத்து வீடுகள் கட்டி கொடுப்பேன். தற்போது பனை ஓலை வீடுகள் இல்லை அதனால பனை தொழில் குறைந்துவிட்டது. நுங்கு மட்டும் வெட்டி கொண்டு வந்து கடைவீதியில் விற் கிறேன். ஒரு நாளைக்கு ரூ. 200 வரை வருமானம் வரும். இப்ப ஒரு வீடு கட்ட பனை ஓலை கேட்டிருக்காங்க. ஆயிரம் பனங்கீற்று ரூ. 2 ஆயிரம் சொன்னேன். 1,500 தருவதாக சொல்லி இருக்காங்க. இனி பனை ஓலை வெட்டி காய வச்சு வீடு கட்டி கொடுக்கணும். இறுதி காலம் வரை... அதே போல இந்த சீசன் முடிஞ்சதும் தென்னை மரம் ஏறி தேங்காய் வெட்டுவேன். தேன்னை மரம் சுத்தம் செய்வேன். எல்லா மரத்திலும் ஏறித்தான் வேலை செய்வேன் கம்பு கட்டி தேங்காய் பறிக்கிறது இல்லை. என்னிடம் அரசு உதவித் தொகை வாங்குறீங்களான்னு கேக்குறாங்க. இதுவரை நான் வாங்கல. எதுக்காக வாங்கணும்? எனக்கு தெம்பு இருக்கு, உழைக்கிறேன். இறுதி காலம் வரை உழைத்து பிழைக்கணும். ஏமாத்தி வாழக்கூடாது என்றார். பின்னர் நுங்குகளை சாக்குகளில் கட்டி, சைக்கிளில் ஏற்றி தள்ளிக்கொண்டு வியாபாரத்திற்கு சென் றார்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 15 காசுகள் உயர்வு ரூ.3 ஆக நிர்ணயம்**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 15 காசுகள் உயர்ந்து, 3 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.**முட்டை விலை உயர்வு** நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை 285 காசுகளாக இருந்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை அதிரடியாக 15 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 300 காசுகளாக உயர்ந்து உள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:- சென்னை-325, ஐதராபாத்-248, விஜயவாடா, தனுகு-268, பார்வாலா-244, மும்பை-288, மைசூர்-306, பெங்களூரு-305, கொல்கத்தா-318, டெல்லி-257. **காரணம் என்ன?**மீன்பிடி தடைக்காலம் அமலில் இருப்பதால் தமிழகத்தில் முட்டையின் தேவை அதிகரித்து உள்ளது. இதேபோல் வட மாநிலங்களிலும் முட்டை விற்பனை அதிகரித்து வருவதால், பிற மண்டலங்களில் முட்டை விலை உயர்ந்து வருகிறது. அதற்கு தகுந்தாற்போல் நாமக்கல் மண்டலத்திலும் முட்டை விலை உயர்த்தப்பட்டு இருப்பதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். முட்டைக்கோழி கிலோ ரூ.50-க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று நடந்த கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.3 உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டைக்கோழி விலை கிலோ ரூ.53 ஆக உயர்ந்து உள்ளது. கறிக்கோழி கிலோ ரூ.94-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

**தூத்துக்குடிக்கு மாம்பழம் வரத்து அதிகரிப்பு**




தூத்துக்குடி,

தூத்துக்குடியில் விற்பனைக்காக மாம்பழங்கள் குவிக்கப்பட்டு உள்ளன.

<u>மாம்பழம் விற்பனை</u>

கோடைகாலத்தில் அதிகம் விளைச்சலை தரும் முக்கனிகளில் ஒன்றான மாம்பழத்தின் சீசன் தொடங்கி உள்ளது. இதனால் மார்க்கெட்டுக்கு மாம்பழங்கள் வரத்து அதிகரிக்க தொடங்கி உள்ளன. தூத்துக்குடி மார்க்கெட்டுக்கு கடந்த சில வாரங்களாக மாம்பழங்கள் அதிக அளவில் வந்து கொண்டு இருக்கின்றன.

இந்த மாம்பழங்கள் ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் ராஜபாளையம் பகுதிகளில் இருந்து அதிக அளவில் மாம்பழங்கள் வருகின்றன. இதனை மக்கள் அதிக அளவில் விரும்பி வாங்கி செல்கின்றனர். குறைந்தபட்சம் கிலோ ரூ.30–க்கும், அதிகபட்சம் ரூ.100 வரை மாம்பழங்கள் விற்பனை நடக்கிறது.<u>விலைவிவரம்</u>

அதன்படி தூத்துக்குடி மார்க்கெட்டில் நேற்று விற்பனை செய்யப்பட்ட மாம்பழங்கள் விலை விவரம் வருமாறு:–

அல்போன்சா– ரூ.80–100, சப்போட்டா– ரூ.50–60, மல்கோவா– ரூ.50

பஞ்சவர்ணம்– ரூ.30–40, கிளிமூக்கு– ரூ.30–40, செந்தூரம்– ரூ.30–40

சுந்தரி– ரூ.40

**கடல் உணவு ஏற்றுமதி ரூ.30,000 கோடியாக உயர்வு**




நாகை: இந்தியாவில் கடல் உணவு ஏற்றுமதி ரூ.30,000 கோடியாக உயர்ந்துள்ளதாக தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழக துணை வேந்தர் மணிமாறன் தெரிவித்தார். நாகை மீன்வள தொழில்நுட்ப நிலையத்தில், மின்னணு சாதனங்களின் பயன்பாடு, மீன்பதப்படுத்தும் பணியாளர்களுக்கான மீன்பதன தொழில்நுட்பங்கள், இறால் பண்ணை உதவியாளர்களுக்கான அடிப்படை இறால் வளர்ப்பு தொழில்நுட்பங்கள் குறித்த பயிற்சி, நடைபெற்றது.இதில் மீன்வள பல்கலைக்கழக துணைவேந்தர் பாஸ்கரன் மணிமாறன் பேசியதாவது: இந்தியாவில் மீன் உற்பத்தி அதிகரித்துள்ளதால் நம் நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கடல் உணவுகளின் மதிப்பு ரூ.30,000 கோடியாக உயர்ந்துள்ளது. மீன் பதனம் செய்வதில் பல தொழில்நுட்ப திறன்கள் நம் பணியாளர்களுக்கு இல்லாத காரணத்தால் சில நவீனபதப்படுத்தும் தொழில் நுட்பங்களை நம நாட்டில் பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. இத்தகைய பயிற்சிகள் மூலம் நவீன தொழில்நுட்பங்களை கையாளக்கூடிய மனிதவளம் உருவாகும் என்றார்.

**காபி ஏற்றுமதி 7.22% அதிகரிப்பு**

புதுடெல்லி: நாட்டின் காபி ஏற்றுமதி கடந்த ஏப்ரல் மாதத்தில் 7.22 சதவீதம் அதிகரித்துள்ளதாக காபி வாரியம் தெரிவித்துள்ளது.



கடந்த மாதத்தில் இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு 31,060 டன் காபி ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. முந்தைய நிதியாண்டின் இதே மாதத்தில் 28,966 டன் ஏற்றுமதி ஆகியுள்ளது. இத்துடன் ஒப்பிடுகையில் 7.22 தம் அதிகரித்துள்ளது. ஏற்றுமதி மதிப்பு ரூ.509.63 கோடி. அதாவது ஒரு டன் ரூ.1,64,078.56 அளவுக்கு மட்டுமே ஏற்றுமதியாகியுள்ளது. முந்தைய ஆண்டில் ஒரு டன் ரூ.1,69,561.48 ஆக இருந்தது என்று காபி வாரிய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**முட்டை விலை உயர்வு: 300 காசுகளாக நிர்ணயம்**

நாமக்கல்: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில், முட்டையின் பண்ணை கொள்முதல் விலையை 285 காசில் இருந்து 15 காசு உயர்த்தி 300 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை உயர்வு, மீன் வரத்து குறைவால் கேரளாவில் முட்டை தேவை அதிகரிப்பு காரணமாக விலையை உயர்த்தியதாக பண்ணையாளர்கள் கூறினர். ஒரு கிலோ முட்டைக்கோழி ரூ.53, ஒரு கிலோ கறிக்கோழி ரூ.93 ஆக நிர்ணயம் செய்யப்பட்டது. மற்ற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்): பெங்களுர்-305, மைசூர்-306, ஐதராபாத்-248, மும்பை-288, விஜயவாடா-268, கொல்கத்தா-318, பர்வாலா-244, டெல்லி-257 காசுகள்.

**கறிக்கோழி கொள்முதல் விலை ரூ.94 ஆக அதிகரிப்பு**



கோவை: கறிக்கோழி பண்ணை கொள்முதல் மொத்த விலை உயிருடன் கிலோ ரூ.94ஆக நேற்று நிர்ணயிக்கப்பட்டது. அதை தொடர்ந்து சில்லரை விற்பனையில் உயிருடன் கிலோ ரூ.110 ஆகவும், தோல் நீக்கிய கறி கிலோ ரூ.180 ஆகவும் விற்பனை செய்யப்பட்டது. கறிக்கோழி உற்பத்தியாளர்கள் கூறுகையில், 'கறிக்கோழி நுகர்வு கடந்த ஒரு மாதமாக அதிகரித்துள்ளது. இதனால் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. தற்போதைய விலை கடந்த 3 ஆண்டுக்கு பிறகு உயர்ந்துள்ள விலையாகும்'என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இரண்டரை ஆண்டுகளில் காய்க்கும் 'பாலூர் பலா'**

திண்டுக்கல் :திண்டுக்கல் அருகே பலக்கனூத்து விவசாயி மணிவேல் தோட்டத்தில் இரண்டரை ஆண்டுகளில் காய்க்கும் 'பாலூர் --- பலா' விளைவிக்கப்படுகிறது.இவ்வகை பலா மரங்கள் அதிகளவில் விழுப்புரம், கடலூர், ஆந்திராவில் விளைகின்றன. சாதாரணமாக பலா மரங்கள் 10 ஆண்டுகள் காய்க்கும். மேலும் பெரிய மரங்களாக இருப்பதால் பழங்களை பறிப்பதில் சிரமம் இருக்கும். ஆனால் 'பாலூர் 1 பலா'

இரண்டரை ஆண்டுகளில் காய்க்க துவங்கும். தொடர்ந்து ஆண்டுதோறும் காய்க்கும். சிறிய மரமாக இருப்பதால் எளிதில் பழங்களை பறிக்கலாம். சுளை பெரிதாகவும், சுவையாகவும் இருக்கும்.மணிவேல் கூறுகையில், "சிறிய மரமாக இருப்பதால் பராமரிப்பது எளிது. நோய் தாக்குதல் குறைவாக உள்ளது. ஒரு மரத்தில் 20 முதல் 25 காய்கள் வரை காய்க்கும். ஒட்டுமுறையில் பலா கன்றுகளை உற்பத்தி செய்து, ரூ.100 க்கு விற்கிறோம்," என்றார்.

**வேளாண் விற்பனையாளர்களுக்கு பயிற்சி**

வாலாஜாபாத்: காஞ்சிபுரம் மாவட்ட, வேளாண் இடு பொருட்கள் விற்பனையாளர்களுக்கு பயிற்சி அளிக்க மாவட்ட வேளாண் துறை நிர்வாகம் முடிவு செய்து உள்ளது.148 கூட்டுறவு தொடக்க வேளாண் வங்கிகள்; 260 தனியார் வேளாண் இடு பொருட்கள் விற்பனை நிலையங்கள் என, மாவட்டம் முழுவதும், 408 வேளாண் இடு பொருட்கள் வினியோக மையங்கள் இயங்கிவருகின்றன. இம்மையங்களில், அடி உரம்; விதை நெல்; மேல் உரம் ஆகிய விற்பனை குறித்து, வேளாண் இடு பொருட்கள் விற்பனையாளர்களுக்கு சிறப்பு பயிற்சி, இம்மாதம் 13ம் தேதி அளிக்கப்பட உள்ளது.இதற்காக, மாவட்ட வேளாண் துறை நிர்வாகம் சார்பில், சிறப்பு விளக்க கையேடு விற்பனையாளர்களுக்கு வினியோகம் செய்யப்பட உள்ளது என, வேளாண் துறை உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**ரூ. 4 கோடிக்கு பருத்தி வர்த்தகம்**

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், நேற்று நடந்த பருத்தி ஏலத்தில், 4 கோடி ரூபாய்க்கு பருத்தி வர்த்தகம் நடந்தது.ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி, மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. நேற்று நடந்த, பருத்தி ஏலத்துக்கு, ஆத்தூர்,

தலைவாசல், கெங்கவல்லி பகுதி மட்டுமின்றி, சின்னசேலம், கள்ளக்குறிச்சி, திட்டக்குடி, பெரம்பலூர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த, 1,500க்கும் மேற்பட்ட விவசாயிகள், 24 ஆயிரத்து, 500 பருத்தி மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர்.இதில், டி.சி.ஹெச்., ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம், 5,199, குறைந்தபட்சம் 4,256 ரூபாய், பி.டி., ரகம் ஒரு குவிண்டால் அதிகபட்சம், 4,381, குறைந்தபட்சம் 3,309 ரூபாய் என, விற்பனையானது. மொத்தமாக, நான்கு கோடி ரூபாய்க்கு பருத்தி வர்த்தகம் நடந்தது

**942 பருத்தி மூட்டை ரூ.14 லட்சத்துக்கு ஏலம்**

ராசிபுரம்: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தில், 942 மூட்டை பருத்தியை ஏலம் கொண்டு வந்ததில், 14 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது.ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது.சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 35க்கும் மேற்பட்ட விவசாயிகள், 942 மூட்டை பருத்தியை ஏலத்துக்கு கொண்டு வந்தனர்.டி.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம், 4,959, குறைந்த பட்சம், 4,141 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆர்.சி.ஹெச்., ரகம் அதிக பட்சம, 4,346, குறைந்த பட்சம், 3,792 ரூபாய்க்கு விற்பனையானது. மொத்தம், 942 பருத்தி மூட்டை, 14 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, திருப்பூர், சேலம், ஆத்தூர், கொங்கணாபுரம் ஆகிய பகுதியை சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்று பருத்தி மூட்டைகளை ஏலம் எடுத்தனர்.

**விளைச்சல் அதிகரிப்பால் வெற்றிலை விலை சரிவு**

அந்தியூர்: விளைச்சல் அதிகரித்த நிலையில், வெற்றிலை விலை குறைந்து உள்ளது.அந்தியூர் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் அதிகளவில் வெற்றிலை பயிரிடப்படுகிறது. மிருதுவதாக, சுவையாக இருப்பதால் வெற்றிலை பிரியர்களிடையே தனிச்சிறப்பை பெற்றுள்ளது.வாரந்தோறும் வெள்ளி, திங்கட்கிழமைகளில் அந்தியூரில் வெற்றிலை சந்தை நடைபெறுகிறது. ஈரோடு மாவட்டம் பெருந்துறை, கோபி, சேலம் மாவட்டம் மேட்டூர். எடப்பாடி, கொளத்தூர், கிருஷ்ணகிரி உள்ளிட்ட பகுதி வியாபாரிகள் சந்தை நாட்களில் வந்து கொள்முதல் செய்து செல்கின்றனர். கற்பூர ரகம் என்று அழைக்கப்படும் வெள்ளை நிற வெற்றிலையும், நல்ல வெற்றிலை என்று அழைக்கப்படும் கருப்பு நிற வெற்றிலையை இப்பகுதி விவசாயிகள் பயிரிடுகின்றனர். வெள்ளை நிற வெற்றிலை பீடா தயாரிக்க, கருப்பு வெற்றிலை ரெகுலர் பயன்பாட்டுக்கு மக்கள் வாங்கி செல்கின்றனர்.திருமண முகூர்த்த சீசன் இல்லை என்பதாலும், வெற்றிலை விளைச்சல் அதிகரித்ததாலும் நான்கு வாரங்களாகவே அந்தியூர் வெற்றிலை விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.நூறு வெற்றிலை கொண்ட ஒரு கட்டு ரூ.70க்கு முகூர்த்த சீசனில் விற்றது. ஆனால் நான்கு வாரங்களாகவே ரூ.30க்கு மட்டுமே விற்றது. இந்த வாரம் திடீரென ரூ.50 வரை விலை போனது. விலை குறைந்த நிலையில், மழையால் வெற்றிலை மகசூல் அதிகரித்து இருப்பது விவசாயிகளை நிம்மதி அடைய செய்துள்ளது.

**நிலக்கடலை விதைப்பண்ணை அமைக்க நம்பியூர் வேளாண்மை துறை அழைப்பு**

கோபி: நம்பியூர் வட்டாரத்தில் கே-6 புதிய ரக நிலக்கடலை விதை பண்ணை அமைத்து மானியம் பெறலாம் என வேளா துறை உதவி இயக்குநர் ஆசைத்தம்பி தெரிவித்துள்ளார்.மேலும், அவர்

கூறியதாவது:தற்போது நம்பியூர் வட்டாரத்தில் பரவலாக கோடை மழை பெய்துள்ளது. மானாவாரி பகுதிகளில் கோடை உழவு செய்யப்பட்டு, நிலக்கடலை விதைப்புக்கு நிலம் விவசாயிகள் தயார் செய்து வருகின்றனர். விவசாயிகள் பயன்பெற, கே-6 என்ற புதிய நிலக்கடலை அறிமுகமாகியுள்ளது. கதிரி என அழைக்கப்படும் இந்தரகம், ஆந்திர மாநிலம் கதிரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தால் உருவாக்கப்பட்டு, 2005ல் அங்கீகரிக்கப்பட்டதாகும்.ஜே.எல்.,24 ரகத்துடன் ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்ட இந்த ரகம், 95 முதல் 105 வது நாளில் அறுவடைக்கு தயாராகி விடும். இறவை, மானாவாரி இரண்டுக்கும் இந்த ரகம், 30 முதல் 35 செ.மீ., உயரம் வளரக்கூடியது. ஏக்கருக்கு 1,500 கிலோ வரை மகசூல் கொடுக்க கூடியது. புதிய ரகம் அறிமுகம் செய்யும் வகையில் விதைபண்ணைகள் அமைத்து விதை பெருக்கம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.தேசிய விதைக்கழகம் மூலம் 2,300 கிலோ, கே-6 விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு, சுமார் 30 ஏக்கரில் விதைபண்ணை அமைக்கப்படவுள்ளது.இங்கிருந்து தரமான சான்று விதைகள் உற்பத்தி செய்து ஆண்டு மானாவாரி பருவத்தில், 150க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு நிலக்கடலை வழங்கப்படும்.நடப்பு மானாவாரி பருவத்தில் விதைப்பண்ணை அமைக்க விருப்பம் உள்ள விவசாயிகள் நம்பியூர் வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகலாம். விதைப்பண்ணை அமைக்கும் விவாசாயிகளுக்கு விதை விநியோக மானியம், மார்க்கெட் விலையை விட கூடுதலாக கொள்முதல் மானியம் வழங்கப்படும். அதிக மகசூல் எடுக்க தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**மஞ்சள் விலை உயராது: வியாபாரிகள் உறுதி**

ஈரோடு: நடப்பாண்டில் மஞ்சள் விலை அதிகரிக்க வாய்ப்பு மிக குறைவு என்ற கருத்து உறுதியாகி வருகிறது. ஈரோடு மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்க தலைவர் ரவி கூறியதாவது: கர்நாடக மாநிலம் கொள்ளேகால், சாம்ராஜ் நகர், தமிழகத்தில் சேலம், தர்மபுரி, நாமக்கல், கரூர், கள்ளக்குறிச்சி, ஈரோடு மாவட்டங்களில் இருந்தும் மகசூலான புதிய மஞ்சள், ஸ்டாக் வைத்த பழைய மஞ்சளை ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு எடுத்து வருகின்றனர்.கடந்த 2009, 2010ம் ஆண்டு மஞ்சள் ஒரு குவிண்டால் ரூ.19 ஆயிரம் வரை விற்றது. இதனால் பல பகுதிகளில் ஆர்வமுடன் அதிக பரப்பில் பயிரிட்டனர். 2011ம் ஆண்டு ஒரு குவிண்டால் விலை ரூ. எட்டாயிரம் முதல் ரூ.10,500 வரை விற்றது. ஆனால் 2012 முதல் தற்போது வரை மஞ்சள் விலை, எதிர்பார்த்த அளவு உயரவில்லை. ரூ.4,500 முதல் 6,500 வரையே விலை நிர்ணயிக்கப்படுகிறது.இதனால் விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர். விலையை எதிர்பார்த்து குடோன், வீடுகளில் மஞ்சளை, விவசாயிகள் ஸ்டாக் வைத்தனர். ஒரு சிலரே கிடைத்த தொகைக்கு விற்றனர்.கடந்தாண்டு ஒரு குவிண்டால் ரூ.5,500 முதல் ரூ.6,500 வரை விற்றது. நவ., மாதத்தில் திடீரென ஒரு குவிண்டால் ரூ.எட்டாயிரத்தை தாண்டியது. இதனால் படிப்படியாக விலை ஏறும் என விவசாயிகள் நினைத்தனர்.ஆனால் ஈரோடு மஞ்சள் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் குவிண்டால் ரூ.6,500 ஆக குறைந்தது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.இந்நிலையில் நடப்பாண்டு ஜன.,யில் குவிண்டால் ரூ.9,219 க்கு விற்றது. அதன் பின் ஈரோடு விரலி குவிண்டால் ரூ.7,500, உருண்டை ரூ.எட்டாயிரம், பனங்காலி ரூ.10 ஆயிரம் வரை விற்றது.இதனால் ஈரோடு மஞ்சள் சொசைட்டி, கோபி மஞ்சள் சொசைட்டி, வெளி மார்க்கெட் என அந்தந்த பகுதியில் உள்ள

மார்க்கெட்டுக்கு கிடைத்த விலைக்கு விற்பனை செய்தனர். தமிழகம் முழுவதும், 17 லட்சம் மூட்டை ஸ்டாக் உள்ளது என தகவல் கிடைத்துள்ளது.கடந்த வாரம் குவிண்டால் விரலி ரூ.7,500 லிருந்து 7,800 வரை, உருண்டை 7,800 முதல் 8,300 வரை, பனங்காலி ரூ.12 ஆயிரம் முதல் 14,500க்கு விற்றது. ஆந்திராவில் இருந்தும் மஞ்சள் வரத்து உள்ளது. எனவே மஞ்சள் விலை இனி உயர வாய்ப்பு இல்லை. சேலம் மஞ்சள் மண்டியில் சற்றே விலை உயர்ந்துள்ளது. போதிய ஸ்டாக் கையிருப்பில் உள்ளது எனவே நடப்பாண்டு விலை அதிகரிக்காது. இவ்வாறு அவர் கூறினார்.

**மண் வள மேலாண்மைக்கு புதிய திட்டம்; நீலகிரி தோட்டக்கலை துறை 'ஜரூர்'**

ஊட்டி : நீலகிரியில் மண் வளத்தை பாதுகாத்து, உற்பத்தி திறனை அதிகரிக்க, 'சாட்டிலைட்' தொழில் நுட்ப உதவியுடன், விவசாய நிலங்களில் மண் வளம் பரிசோதனை செய்யும் திட்டம் துவங்கியுள்ளது.

உணவு, நீர் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு அடிப்படையாக விளங்கும் மண் வள மேலாண்மை மற்றும் மண்ணின் உற்பத்தி திறனை கண்டறிந்து, விவசாயிகள் பெறும் லாபத்தை அதிகரிக்க செய்ய, மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்புடன், 'மண் வள இயக்கம்' என்ற திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.நடப்பாண்டு துவங்கி, அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு, இத்திட்டம் செயல்பாட்டில் இருக்கும். நீலகிரியில், தோட்டக்கலை துறை மூலம், இத்திட்டம் செயல்படுத்தப்பட உள் ளது. ஊட்டி அருகே பேரார் கிராமத்தில், இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மண் வள பரிசோதனையை, நீலகிரி மாவட்ட கலெக்டர் சங்கர் பார்வையிட்ட பின், கூறியதாவது;

மாவட்டத்தின் அனைத்து வருவாய் கிராமங்களிலும், மண் வள பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளது. நிலத்தின் தன்மை மற்றும்

அதுதொடர்பான ஆய்வில் துல்லியத் தன்மையை ஏற்படுத்தும் நோக்கில், 'ஜி.பி.ஆர்.எஸ்.,' தொழில்நுட்ப உதவியுடன், மண் மாதிரிகள் எடுக்கப்பட்டு, முழுமையான ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அதன் முடிவுகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும்.இத்தகைய ஆய்வு மேற்கொள்ளும் விவசாய நிலங்களின் உரிமையாளர்களுக்கு, மண் வள அட்டை வழங்கப்படும்; அதில், மண்ணின் தன்மை உட்பட பிற விபரங்கள் பதிவு செய்து வழங்கப்படும். அதன் மூலம் குறைபாடுள்ள விளை நிலங்கள் துல்லியமாக கண்டறியப்பட்டு, அதற்கான பரிந்துரைகள் உடனுக்குடன் வழங்கப்படும்.

இத்திட்டத்தின் கீழ், இந்தாண்டு நீலகிரியில், 18 வருவாய் கிராமங்களில் இருந்து, 10 ஹெக்டருக்கு ஒரு மண் மாதிரி வீதம், மொத்தம், 2,495 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட உள்ளன. அடுத்த, இரு ஆண்டுகளில் மீதமுள்ள அனைத்து வருவாய் கிராமங்களில் இருந்தும், 5,000 மண் மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டு, முடிவுகள் வழங்கப்படும். தோட்டக்கலை துறை வேளாண் அலுவலர்கள் முன்னிலையில், உதவி வேளாண் அலுவலர்கள், வி.ஏ.ஓ.,க்கள் உதவியுடன் கிராமங்கள் வாரியாக, மண் மாதிரிகள் எடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு, கலெக்டர் சங்கர் கூறினார்.

மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் மணி, துணை இயக்குனர் சுப்ரமணியம் சாம்ராஜ், வேளாண் பொறியியல் துறை செயற் பொறியாளர் லூர்து ஆரோக்கியகுமார் உட்பட பலர் பங்கேற்றனர்.

**திருவாரூரில் பலத்த மழை**

திருவாரூர்: திருவாரூர் மாவட்டத்தில், நேற்று பலத்த மழை பெய்ததால், மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தமிழகத்தில், கடந்த ஒரு மாதத்திற்கும் மேலாக கோடை வெயில், மக்களை வாட்டி வதைத்தது. கடந்த ஒரு வாரத்திற்கு முன், மாநிலம் முழுவதும் பரவலாக பெய்த மழை காரணமாக,

வெப்பம் குறைந்தது. கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திர வெயில் நேற்று முதல் துவங்கியுள்ளது. இந்நிலையில், தென்மேற்கு வங்க கடலில் உருவாகியுள்ள மேலடுக்கு சுழற்சி காரணமாக, நேற்று திருவாரூரில் மதியம், 12 மணி முதல், ஒரு மணிவரை இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது.இதே போல் திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, நன்னிலம் போன்ற பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. இதனால், திருவாரூர் மற்றும் மன்னார்குடி நகர் பகுதிகளை தவிர மற்ற பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. நன்னிலம், திருத்துறைப்பூண்டி பகுதிகளில் மாலை, 6 மணி வரை முற்றிலுமாக மின்சாரம் துண்டிக்கப்பட்டது.

**கொடைக்கானலில் சாரல் மழை**

கொடைக்கானல்: கொடைக்கானலில் சீசன் களைகட்டிய நிலையில் நேற்று சாரலுடன் பெய்த மழையால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்தனர். பெருமாள்மலை பகுதியில் நல்ல மழை பெய்தது. இதனால் குடிநீர் தட்டுப்பாடு தீர்ந்தது. பல மாநிலங்களிலிருந்து வந்த சுற்றுலா பயணிகள் ரம்மியமான சூழ்நிØலையை அனுபவித்து மகிழ்ந்தனர். காலை முதலே சுற்றுலா இடங்களுக்கு சென்று இயற்கை காட்சிகளை கண்டு ரசிக்க தொடங்கினர். மோயர் பாய்ன்ட், பில்லர் ராக், குணா குகை , பசுமை பள்ளத்தாக்கு, போன்ற பகுதிகளை மறைத்த மேகங்களால் அப்பகுதியின் இயற்கை எழிலை கண்டு ரசிக்க முடியாமல் ஏமாற்றமடைந்தனர். சாரல் மற்றும் பெய்த மழையினால் வெயிலின் தாக்கம் குறைந்துள்ளது. மேதின கூட்டத்தால் களைகட்டிய நகரில் நேற்று கூட்டம் கொஞ்சம் குறைவாக இருந்தது.சென்னையை சேர்ந்த பயணி விஜயன் கூறியதாவது: கொடைக்கானலுக்கு குடும்பத்துடன் வந்தேன். அங்கு வறுத்தெடுக்கும் வெயில் தாங்க முடியவில்லை.இங்கு நல்ல சீதோஷ்ணநிலை உள்ளதை குடும்பத்துடன் நன்கு அனுபவித்தேன். இந்த

சூழ்நிலை நீடித்தால் ஒருவாரம் தங்கி, அனைத்து இடங்களையும் சுற்றிப் பார்க்கலாம் என எண்ணியுள்ளேன், என்றார்.

**வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு விருது**

தேவதானப்பட்டி: வைகை அணை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்திற்கு தமிழகத்தில் சிறந்த விதை உற்பத்தி மையத்திற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.தேனி மாவட்டம், வைகை அணை வேளாண்மை ஆராய்ச்சி மையத்தில் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கம் நடைபெறுகிறது. இந்த நிலையத்தில் வல்லுனர் விதை, ஆதாரவிதை மற்றும் உண்மைநிலை விதை நெல், கடலை, பயறு வகைகள் மற்றும் பசுந்தாள் உரங்களில் விதை உற்பத்தி செய்யப்படுகிறது. வைகை அணை விதை ஆராய்ச்சி நிலையத்தின் பணிகளை பாராட்டி தமிழகத்தின் சிறந்த விதை உற்பத்தி மையமாக தேர்வு செய்யப்பட்டுள்ளது. கோவை தமிழ்நாடு பல்கலை சார்பில் பாராட்டு தெரிவித்து இதன் தலைவர் பாலகிருஷ்ணனிடம் சான்று வழங்கப்பட்டது.

**அக்னியை தணித்த கோடை மழை**

ராமநாதபுரம்: ராமநாதபுரத்தில் நேற்று மதியம் பெய்த கோடை மழை அக்னியின் தாக்கத்தை தணித்தது. தமிழகத்தில் அக்னி வெயில் நேற்று (மே 4) துவங்கி மே 29ம் தேதி வரை நீடிக்கிறது. அக்னியின் கடுமையாக தாக்கத்தை போக்க மழை பெய்ய வேண்டும் என்பது அனைவரின் ஒட்டு மொத்த ஆசையாக உள்ளது. இந்நிலையில் ராமநாதபுரத்தில் நேற்று மதியம் 1.45 மணிக்கு லேசான சாரல் மழை பெய்தது. ஒரு சில இடங்களில் கனத்த மழைத்துளி விழுந்தது. ஒரு புறம் வெயில், மறுபுறம் மழை என இரண்டும் கலந்த வானிலை நிலவியது. அரை மணி நேரம் பெய்த மழையால் நகரின் பல இடங்களில் தண்ணீர் தேங்கியது. முதல் அக்னியை கோடை மழை தணித்ததால் மக்கள் மகிழ்ந்தனர்.

**வண்ணம் மாறிய வலசை பறவைகளுக்கு வழியனுப்பு விழா! : நீர்நிலைகள் குறித்த ஆய்வில் புதிய தகவல்**

வலசை வரும் பறவைகள் உடலில், இனப்பெருக்க காலத்தில் ஏற்படும் வண்ண மாற்றங்கள் மூலம், தமிழகத்தில் உள்ள நீர்நிலைகளின் சூழலியல், பறவை இனங்களின் உணவு தேவையை, நல்ல முறையில் பூர்த்தி செய்வது, தெரியவந்துள்ளது.

பனிப்பொழிவால், பூமியின் வட கோளத்தில் வசிக்கும் பறவைகள், உணவு, இதமான தட்பவெப்பம் தேடி, தெற்கு நோக்கி இடம் பெயரும். மங்கோலியா, ஐரோப்பா உள்ளிட்ட பகுதிகளில் இருந்து, தெற்கு நோக்கி வலசை வரும் பறவைகளில், குறிப்பிட்ட சில இனங்கள், இந்தியாவுக்கு வருகின்றன. ஆண்டு தோறும், தென்மேற்கு பருவமழை முடியும்போது, இந்தியா வரும் அந்த பறவைகள், வடகிழக்கு பருவமழை முடியும்போது, தமிழகத்துக்கு வரும்.

தமிழகத்தில்...இவ்வாறு தமிழகத்துக்கு வரும் அவை, நீர் நிலைகள் உள்ள பகுதிகளில் தங்கும். குறிப்பாக, திருவள்ளூர் மாவட்டம் பழவேற்காடு, பள்ளிக்கரணை, நாகை மாவட்டம் கோடியக்கரை, நெல்லை மாவட்டம் கூந்தன்குளம் வரையிலான பல்வேறு நீர்நிலைகளில் அதிக எண்ணிக்கையில், அவை தங்குகின்றன. இதை பயன்படுத்தி, வலசை வரும் பறவைகள் குறித்த கணக்கெடுப்பில், பல்வேறு தன்னார்வ அமைப்புகள் ஈடுபட்டுள்ளன. நீர் நிலைகளிலும், அவற்றை ஒட்டிய பகுதிகளிலும் ஏற்படும் மாற்றங்களால், கடந்த சில ஆண்டுகளாக பறவைகள் எண்ணிக்கை குறைந்து வருவதாக, ஆர்வலர்கள் தெரிவிக்கின்றனர்.இதில், எண்ணிக்கை அடிப்படையிலேயே பல்வேறு அமைப்புகளும் கணக்கெடுப்பு நடத்தும் நேரத்தில், 'நேச்சர் டிரஸ்ட்' உள்ளிட்ட சில அமைப்புகள், வலசை காலத்தில் அந்த பறவைகளின் உடலில் ஏற்படும் மாற்றங்களும், அதற்கு இங்குள்ள சூழல் எந்த

அளவுக்கு சாதமாக உள்ளது என்பது குறித்தும், ஆய்வு செய்துள்ளன.

இனப்பெருக்கம்வலசை வரும் பறவைகள் எண்ணிக்கை குறைந்தாலும், தற்போதைய சூழல், பறவை களுக்கு எந்த அளவுக்குஉதவிகரமாக உள்ளது என்று பார்ப்பதற்காகவே, இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உள்ளது.பொதுவாக, வலசை காலத்தில் கிடைக்கும் உணவுகள் தான், பறவைகளை உடல் அளவில் இனப்பெருக்கத்திற்கு தயார்படுத்துகின்றன. அதற்கு, வலசை காலத்தில் அவற்றுக்கு நல்ல உணவு கிடைக்க வேண்டியது அவசியம். எனவே, வலசை காலத்தில் தமிழக நீர் நிலைகளில் இப்பறவைகளுக்கு எத்தகைய உணவு கிடைக்கிறது என்பதை பொறுத்தே, பறவை இனங்களின் இனப்பெருக்கம் அமையும். அதன் வாயிலாகவே, உலகில் அந்த பறவைகள் எண்ணிக்கைதீர்மானிக்கப்படும். வலசை காலத்தில், கிடைக்கும் உணவுகள் அடிப்படையில், அவற்றின் உடலில் கொழுப்பு சத்து அதிகரிக்கும். அதனால், அவற்றின் தோற்றத்தில் பொலிவு ஏற்படும். வண்ணங்கள் மாற்றம்அந்த மாற்றங்களின் தொடர்ச்சியாக, ஒரு பறவை இனப்பெருக்கத்திற்கு தயாராகிவிட்டது என்பதை, எதிர்பாலினத்துக்கு தெரிவிக்கும் வகையில், அவற்றின் இறக்கை வண்ணங்கள் மாறும்.

இதுகுறித்து, 'நேச்சர் டிரஸ்ட்' அமைப்பின் நிறுவனர் திருநாரணன் கூறியதாவது:

* சென்னையில் பழவேற்காடு, பள்ளிக்கரணை, கோவளம் போன்ற பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், பெரும்பாலான பறவைகள் இனப்பெருக்கத்திற்கு உடல் அளவில் நல்ல முறையில் தயாராகி இருப்பது, வண்ண மாற்றங்கள் வாயிலாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

* பூ நாரைகள், தட்டைவாயன், நீல சிறகு வாத்து, ஊசிவால் வாத்து, கிளுவை, வளை மூக்கு மண் கொத்தி, பொன்னிற உப்பு கொத்தி, சாம்பல் நிற உப்பு கொத்தி, சிறு கொசு உள்ளான், கரண்டிவாயன் போன்ற

பறவைகளின் உடலின் வண்ணங்கள் மாறியுள்ளது, புகைப்படங்கள் மூலம், உறுதி செய்யப்பட்டுள்ளன.* அதில், பூ நாரைகளுக்கு இறக்கை பகுதியில் இளஞ்சிவப்பு அடர்த்தி அதிகமாகும். உப்பு கொத்தி பறவைகளுக்கு கழுத்து பகுதியில், கறுப்பு வண்ணம் அடர்த்தி அதிகரிக்கும். இதுபோன்று, ஒவ்வொரு பறவையின் உடலிலும் வண்ணங்கள் மாறும்.பாதுகாப்போம்!

* பருவநிலை மாற்றம், நகர் மயமாதல், வேட்டை போன்ற காரணங்களால், பறவைகள் எண்ணிக்கை குறைந்து வரும் நிலையில், தமிழகம் வரும் பறவைகளுக்கு, நல்ல நிலையில் உணவு கிடைக்கிறது என்பது, இந்த ஆய்வு வாயிலாக தெரியவந்துள்ளது.

* இங்குள்ள நீர்நிலைகளை, நல்ல முறையில் பராமரித்து பாதுகாத்தால், வலசை பறவைகளின் இனப்பெருக்கம் அதிகரிக்கும். உயிர் சூழலில் இவற்றின் எண்ணிக்கை சமநிலை பராமரிக்கப்படும். இந்த பின்னணியில், வலசை பறவைகள் தினம், மே, 9, 10ம் தேதிகளில், வழியனுப்பு விழாவாக கடைப்பிடிக்கப்படுகிறது. இவ்வாறு அவர் கூறினார்.(மே, 9, 10 - வலசை பறவைகள் வழியனுப்பு தினம்)